<u>செய்தி வெளியீடு எண்.835</u> <u>நாள்.3.10.2008</u>

பத்திரிகைச் செய்தி

2008-ற்கு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் தமிழ் நாட்டைச் சார்ந்த புனிதப் பயணிகளுக்கு இரண்டாம் கட்டமாக பல்வேறு மையங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம் நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு ஏற்பாடு செய்துள்ளது. இப்புத்தறிவுப் பயிற்சியின்போது சவூதி அரேபியாவில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், பயண விவரங்கள், ஹஜ் பற்றிய வழிமுறைகள், ஹஜ் குழு மற்றும் ஜித்தாவிலுள்ள இந்தியத் துணை தூதரகத்தின் இதர ஏற்பாடுகள், மற்றும் இதர தகவல்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்படும். இப்பயிற்சி முகாம்கள் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும்.

2. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பின்வருமாறு நடைபெறவுள்ளன:–

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் சார்ந்தவர்கள் |
|---|---|---|---|
| 1. | 07–10–2008<br>செவ்வாய் கிழமை | ராஜா மஹால்,<br>34 டி, திருவிடை மருதூர் ரோடு,<br>கும்பகோணம் (நால் ரோடு அருகில்) | தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம். |
| 2. | 08–10–2008<br>புதன்கிழமை | ஹோட்டல் அரிஸ்டோ, டயமண்ட் மஹால்,<br>எண்.2, திண்டுக்கல் ரோடு,<br>திருச்சிராப்பள்ளி–620 001. | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் |
| 3. | 09–10–2008<br>வியாழக் கிழமை | ஷம்சுல் இஸ்லாம் ஹனஃபி சுன்னத் ஜமாத்,<br>திப்பு நகர், சாராமேடு ரோடு,<br>கரும்புக்கடை, கோயம்பத்தூர்–641 008. | கோயம்பத்தூர் மற்றும் நீலகிரி. |
| 4. | 11–10–2008<br>சனிக்கிழமை | K.S.R. மஹால்,<br>மஞ்சக்குப்பம்,<br>கட லூர். | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 5. | 12–10–2008<br>ஞாயிற்றுக் கிழமை | சின்ன முஹல்லா, சின்ன புது பள்ளி வாசல்,<br>வெளிப்பட்டினம்,<br>இராமநாதபுரம். | இராமநாதபுரம் |

3. ஹஜ்ஜை முறையாக நிறைவேற்ற இப்பயிற்சி முகாம்களில், பெண் புனிதப் பயணிகள் உட்பட அனைத்து ஹஜ் பயணிகளும் அதாவது தேர்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் மட்டும் கலந்துகொள்ளுமாறும், அதன்மூலம் ஹஜ் பயணத்திற்கான விதிமுறைகள், வழிவகைகள் மற்றும் நடைமுறைகளை விரிவாகத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பன்னாட்டு பாஸ்போர்ட்டில் தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் தாங்கள் விரும்பினால் இப்புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

4. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை மாநில ஹஜ் குழு அனுப்பி வைக்க உள்ளது. அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆலிம்கள் ஹஜ்ஜினை முழுமையாக நிறைவேற்றுவது பற்றிய விளக்கங்கள் அளிப்பார்கள்.

5. மேலும், இது குறித்து ஏதேனும் தகவல் ஹஜ் புனிதப் பயணிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண்கள்: 044–28252519 மற்றும் 044–28227617)

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.